ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

ஆர்ய தர்மம்.

प्रदानं प्रच्छन्नं गृहमुपगते संभ्रमविधिः
प्रियं कृत्वा मौनं सदसि कथनं चाप्युपकृतेः ।
अनुत्सेको लक्ष्म्यां निरभिभवसाराः परकथाः
सतां केनोद्दिष्टं विषममसिधाराव्रतमिदम् ॥ भर्तृहरिः ।

ப்ரதாநம் ப்ரச்சந்நம் க்ருஹமுபகதே ஸம்ப்ரமவிதி:
ப்ரியம் க்ருத்வா மௌநம் ஸதஸி கதநம் சாப்யுபக்ருதே: ।
அநுத்ஸேகோ லக்ஷ்ம்யாம் நிரபிபவஸாரா: பரகதா:
ஸதாம் கேநோத்திஷ்டம் விஷமமஸிதாராவ்ரதமிதம் ॥

பிறருக்குத் தாம் தானம் கொடுப்பதை இதரர்களுக்குத்
தெரியாமல் ரஹஸ்யமாகக் கொடுப்பது, தம் வீட்டுக்கு அதிதிகள்
வந்தால், அநாதரவாயிராமல் சீக்கிரமாய் அவர்களுக்கு வேண்டிய
கார்யங்களைச் செய்வது, ஒருவருக்குப் பிரியமான கார்யத்தைச்
செய்து அதை வெளியிடாமல் மௌனமாயிருப்பது தமக்குப்
பிறரால் செய்யப்பட்ட உபகாரத்தை ஸபைகளில் இவ்விதமுப
கரித்தாரென்று தெரிவிப்பது அதிகமான ஐசுவர்யம் வருங்கால்
கர்வமில்லாமலிருப்பது பிறருடைய நடத்தைகளில் குறை கூறும
லிருப்பது முதலான சிறந்த குணங்கள் மஹான்களுக்கு யாராலு
பதேசிக்கப்பட்டன. ஒருவராலுமில்லை. பின்னை கத்திமுனை
யில் ஸஞ்சரிப்பதுபோல் மிகவும் கடுமையான இந்தவிருதமானது
அவர்களுக்கியற்கையிலேயே ஏற்பட்டிருக்கிறது.

இதனால் தம் சக்திக்கியன்ற வரையில் ஈவது அதிதிகளைப்
பிரியத்துடன் ஆதரிப்பது பிறருக்குப் பிரியமான காரியத்தைச்
செய்வது தற்புகழ்ச்சியில்லாமலிருப்பது பிறரிடமிருந்து பெற்ற
உபகாரத்தை வெளியிடுவது, அகங்காரமில்லாமலிருப்பது, பர
நிந்தை விலக்குவது முதலிய காரியங்களைஎவ்வளவு சிரமம் நேர்ந்
தாலும் விடாமல் அநுஷ்டிக்கவேண்டுமென்றும், அவ்விதமநுஷ்
டித்தால் தான் நாம் சிரேயஸ்ஸைப் பெறலாமென்றும் அறிவிக்கப்
படுகின்றது.

உப பத்திராதிபர்.

328

ஆர்ய தர்மம்.

பிரபவஹ்ல வைகாசி-மீ உ௦ வ

ஆத்மாநாத்ம விவேகம்.

(உஎகூ-வது பக்கத்தொடர்ச்சி)

சிஷ்:— 'பாயு' இந்திரியமென்றால் என்ன? குதம் இல்லாமலும், குதத்தை ஆசரயித்து இருப்பதும் மலத்தை வெளியில் தள்ளும் சக்தி பொருந்திய இந்திரியமே பாயு எனப்படும்,

சிஷ்:—உபஸ்தேந்திரியம் என்றால் என்ன?

குரு:—ஸ்திரீபுமான்களின் ரகஸ்ய ஸ்தானங்கள் இல்லாததும் அந்தஸ்தானத்தை ஆச்ரயித்துக்கொண்டு ஜலம் முதலியவைகளை வெளியிடக்கூடிய இந்திரியத்துக்கு உபஸ்தம் என்று பெயர், இவைகள் தான் கர்மேந்திரியங்கள்.

சிஷ்:—அந்தஃகரணம் என்றால் என்ன?

குரு:—மனஸ், புத்தி, சித்தம், அகங்காரம் என்கிற இவைகளே அந்தக்கரணமெனப்படும். மனத்திற்குஸ்தானம்கழுத்தின் மத்யப்பிரதேசம் புத்திக்கு இருப்பிடம் முகம்.சித்தத்திற்கு இருப்பிடம் நாபி. அகங்காரத்துக்கு இருப்பிடம் ஹிருதயம்.

சிஷ்:—இவைகளுக்கு விஷயங்கள் எவை?

குரு:—மனது முதலான நான்குகளுக்கும் முறையே சம்சயம் நிச்சயம். தாரணை, அபிமானம் இவைகளே விஷயங்களாகும். அறிந்த ஓர் விஷயத்தை தியானிக்குங்கால் அந்தக்கரணத்தில் ஏற்படும் விர்த்திக்குச் சித்தம் என்று பெயர். ஒன்றை அபிமானிக்கும்கால் உண்டாகும் அந்த கரணவிர்த்திக்கு அகங்காரம் எனப்பெயர். சித்தம் புத்தியிலும், அகங்காரம் மனதிலும் அடங்கியிருக்கின்றன.

சிஷ்:—பிராணுதி வாயுபஞ்சகங்கள் எவை?

குரு:—பிராணன், அபானன், சமானன், உதானன், வியானன் இவ்வைந்துகளே யாகும்.

சிஷ்:—இவைகளின் ஸ்தானங்கள் எவை?

குரு— हृदि प्राणो गुदे पानः समानो नाभिसंस्थितः ।
उदानः कण्ठदेशस्थः व्यानस्सर्वशरीरगः ॥

ஹ்ருதி ப்ராணோ குதே பாந: ஸமாநோ நாபிஸம்ஸ்தித: ।
உதாந: கண்டதேசஸ்த: வ்யாநஸ்ஸர்வசரீரக: ॥

பிராணனுக்கு ஹிருதயமும், அபானனுக்கு குதமும், சமானனுக்கு நாபியும், உதானனுக்கு கண்டப்பிரதேசமும், வியானனுக்கு சர்வசரீரமும் ஸ்தானங்களாக அறியவேண்டும்.

சிஷ்:—இவைகளுக்கு விஷயங்கள் எவை?

குரு:—பிராணன் முகத்துக்குள்ளிருப்பவன். அபானன் முகத்தில் குறுக்காகச் செல்லுகிறவன். உதானன் முகத்திலிருந்து வெளியில் செல்லுபவன். சமானன் எல்லாவற்றையும் சமமாகச் செய்கிறவன். வியானன் நான்குபக்கங்களிலும்செல்லுகிறவன் இவைகளுக்குள் கிரியாசக்தியையுடையதான பிராணமய கோசமானது காரியரூபமாக இருக்கின்றது. இச்சாசக்தியுடைய மனோமய கோசமானது காரணரூபமாக இருக்கின்றது ஞானசக்தியுடைய விக்ஞான மய கோசமானது கர்த்ரு ரூபமாக இருக்கிறது. இவையாவும் சேர்ந்து லிங்கசரீரமென்றும் கோசத்ரயம் என்றும் சொல்லப்படுகிறது.

இவ்விதமே—

पञ्चप्राणमनोबुद्धिदशेन्द्रियसमन्वितम् ।
अपञ्चीकृतभूतोत्थं सूक्ष्माङ्गं भोगसाधनम् ॥

பஞ்சப்ராணமநோபுத்திதசேந்த்ரியஸமந்விதம் ।
அபஞ்சீக்ருதபூதோத்தம் ஸூக்ஷ்மாங்கம் போகஸாதநம் ॥

என்று ஒரு அறிஞரும் வெளியிட்டிருக்கிறார்.

மறைந்திருக்கும் ஆன்மஸ்வரூபத்தை சிரவணமனனுதிஸாதனங்களால் அறியும்படி செய்கின்றதினுல் லிங்கமென்று பெயர். ஸ்திரமில்லாமல்நாசமடையுந்தன்மையிலிருப்பதால்சரீரமெனப்

படுகின்றது. இதினல் பரமாத்ம ஸ்வரூபத்தையறிவிக்கும்சக்தி பொருந்தியதும் நாசத்தை யடையக்கூடியது மாயிருப்பதற்கு லிங்கசரீரமென்ற பெயர் ஏற்பட்டது.

சிஷ்:—சரீரம் எப்படி நாசத்தையடைகிறது?

குரு:— நான் ப்ரும்மமாக ஆகிறேன் என்கிற ப்ரும்மமும் ஆத்மாவும்ஒன்றென்கிறஞானத்தினல் சரீரம் விலகிவிடுகிறது.

உப-பத்திராதிபர்.

ஹிந்துமதம் இருப்பதா இறப்பதா?

கல்கத்தா ஆல்பர்ட் ஹாலில் ஹிந்து சங்கத்தின் அவசியம் என்னும் விஷயமாக லாலாலஜபதிராய் ஓர் பிரஸங்கம் செய்ததாயும் கூட்டத்திற்கு ஏராளமான ஜனங்கள் வந்திருந்ததாயும் 14—4—27ல் வெளியான சுதேசமித்திரனில் பிரசுரமாய் இருப்பதை அநேயர்கள் அறிந்திருப்பார்கள். அதைப்பற்றி சற்று விசாரிக்க வேண்டியிருப்பதைப்பற்றி இங்கிறங்குவாம்.

இதில் லாலா அவர்கள் ஹிந்துமதப்பற்றினல் அம்மதத்திற்கு வரும் தாழ்மையை உத்தேசித்து மிகவும் வருந்தி இவ்வுபன்யாஸத்தை ஆரம்பித்தார். இவ்விதம் மதப்பற்றுள்ள பெரியார் நம் தேசத்தில் முன் வருவது நமக்கு மிகமேன்மையே ஆயினும் ஓர்புரம் எனக்கு லாலாஜியைப் போன்றவர்களிடத்தில் மனவருத்தமுண்டாகிறது. ஏனெனில் இவர்கள் நம்மதத்தின் உண்மையை நம்முன்னேர்களின் மூலமாய் அறிந்து கொள்ளவில்லையென்பதே. தற்காலம் நம்மதப்பற்றுள்ளவர்களாய்க் கிளம்பும் பிரபுக்கள் அன்யமதஸ்தர்களிடமிருந்துதான் ஒருவாறு தெரிந்துகொண்டிருக்கிறர்களென்பது இயற்கையில் வெளியாகும் எவ்விதமெனின் ஹிந்துமதம் இருப்பதா இறப்பதாவென்று ஆரம்பித்ததே இதில் முதல் சாக்ஷி. நம்மிந்துமதமென்பது மற்றய மதம்போல் நேற்று உண்டானதல்ல. மதம் நம்மைக் காப்பாற்ற அனுஷ்டித்தமாய் நிற்கிறது. இம்மதப்பற்று யாருக்கு ஏற்படுகிறதோ அவன் அநேக ஜன்மங்களில் புண்யம் செய்தவனுய் இருக்கவேண்டும்.

331

कर्मातिशयमासाद्य पशोः पापपरिक्षयः ।
एवं प्रक्षीणपापस्य बहुभिर्जन्मभिः क्रमात् ॥
भवेद्विषयवैराग्यं वैराग्याद्भावशोधनम् ।
भावशुद्ध्युपपन्नस्य शिवज्ञानसमुद्भवः ॥
ज्ञानध्याननियुक्तस्य पुंसो योगः प्रवर्तते ।
योगेन तु पराभक्तिः प्रसादस्तदनन्तरम् ।
प्रसादान्मुच्यते जन्तुर्मुक्तश्शिवसमो भवेत् ॥

கர்மாதிஶயமாஸாத்ய பஶோ: பாபபரிக்ஷய: ।
ஏவம் ப்ரக்ஷீணபாபஸ்ய பஹுபிர்ஜன்மபி: க்ரமாத் ॥
பவேத்விஷயவைராக்யம் வைராக்யாத்பாவஶோதனம் ।
பாவஶுத்த்யுபபன்னஸ்ய ஶிவஜ்ஞானஸமுத்பவ: ॥
ஜ்ஞானத்யானநியுக்தஸ்ய பும்ஸோ யோக: ப்ரவர்த்ததே ।
யோகேன து பராபக்தி: ப்ரஸாதஸ்ததனந்தரம் ।
ப்ரஸாதான்முச்யதே ஜந்துர்முக்தஶ்ஶிவஸமோ பவேத் ॥

விசேஷமாய்க் கன்மப்பற்றுள்ளவனாய் மனிதன் ஆகும்போது பாபம் துலையும். இவ்விதம் அநேக ஜன்மம் கடந்தபிறகு வைராக்யம் உதிக்கும் அதனின்றும் மனது சுத்தமாகும். அதனால் சிவஞானம் ஏறும். அச்சிவஞானத்தால் தியானம் நிலைபெற்று யோகம் வளரும். யோகத்தினால் பரமபக்தியும் பிரஸாதமும் உண்டாம். அதனின்றும் முக்தி கிடைத்து சிவஸாயுஜ்யம் பெறுவானென்று வாயு ஸம்ஹிதை கூறுகின்றது. இங்கு பரம க்ஷேமத்திற்குப் படி கட்டியிருப்பதை ஊன்றி கவனித்துப்பாருங்கள். அநாதிஸித்தமான நம்மதத்தில் பிறந்திருப்பதே நமக்குமிகப்பெருமை. அத்துடன் அம்மதபக்தி மேல்மேல் ஓங்குவது விசேஷ புண்யத்தின் பலனென்பதைக் கூறல் வேண்டுமோ? ஆகவே நித்தியமாய் அகண்டமாய் நிற்கும் நம்மதம் இருப்பதா இறப்பதாவென்று நாமே கூறுவது நம்முடைய அறியாத்தனமென்பதில் ஐயம் உண்டோ? சிவனை வழிபடு விஷ்ணுவை வழிபடு அவ்விதமில்லையேல் சிவனும் விஷ்ணுவும் இறந்துவிடுவார்களென்பதற்கும் இதற்கும் யாதொரு வித்யாஸமும் இல்லை. நம்மதம் என்றுமுள்ளதென்

பதை இன்னென்றாலும் அறியலாம். கிருதயுகம் முதலானகாலத்தில் கடவுளை மனதில் வைத்தே தியானித்து ஸித்திபெற்றிருந்தார்கள். அவ்விதம் ஸித்திபெற்ற மகான்களுக்கு அடியார்களாய்த் தொண்டு புரிந்துகொண்டு மற்றவர்கள் இஷ்டஸித்தியைப்பெற்று வந்தார்கள். பிறகு அது ஸாத்தியமாகாதென்று நம் பெரியார்கள் கண்டறிந்து கற்களால் ஆலயங்களை ஆங்காங்கமைத்து மந்திர சக்தி விசேஷத்தால் தேவனை ஆவாகனம் செய்து ஆராதனை செய்யவாரம்பித்தனர். இவ்விதம் ஆரம்பித்தது நேற்று' இல்லை. அநேக ஆயிரம் வருடங்கள் சென்றுவிட்டனவென்பதை புராதன ஜீர்ண ஆலயங்கள் யாவரையும் எளிதிலறியும்படி செய்கின்றன. இவ்விதமிருக்க நேற்றுத்தான் வந்தேனென்பதைக் காட்டிக்கொண்டு அவன் கிடக்கட்டும் குடிகாரன் எனக்கு ஒரு பாடில் ஊற்றுங்களென்பது போல் நம்மை விக்கிரகாராதனம் செய்கிறவர்களென்று இகழ்ந்துகொண்டு காரையையும் செங்கலையும் கொண்டு கட்டடம் கட்டிப் பிரதிதினமும் பழுதுபார்த்துக்கொண்டுபளபளவென்று வைத்துக்கொண்டு எங்கள் மதம்தான் உயர்ந்தது எங்கள் மதத்தில் சேருங்களென்று ஆள்களைத்திரட்டிக் கூட்டம் சேர்க்கும் மதத்தினரைப்பார்த்து நாமும் நம்மதத்தில் சேருங்களென்று கூற நாம் முயற்சிப்பது நமக்கு எவ்வளவு குறைவென்பதை கவனித்துப் பாருங்கள். நம்மதம் இப்போதுதான் தோன்றிற்றென்று கூற யாராவது முன்வருவாரா? நம்முன்னோர்கள் இவ்விதமெல்லாம் நம்மதத்தைக் காப்பாற்றவேண்டுமென்று சொல்லவில்லை செய்யவுமில்லை. உண்மையாய் நம்மதத்தைக் காப்பாற்றவேண்டுமானல் நாம் செய்யவேண்டிய வழி இது. நம்மதப்பிரசாரத்திற்காக உபன்யாஸகர்களை ஏராளமாய் ஏற்படுத்தி மதப்பிரசாரம் செய்யவேண்டும். நம்மதத்தை விட்டுப்புறமதம் புகுந்தவர்களைத் திருப்பிபழைக்கக் கூடாது. வாவிரும்புபவனை நாம் முன்போல் வருணத்தில் சேர்க்கவே கூடாது. உண்மையாய் நம்மதப்பற்றையறிந்து திரும்பினுல் அவன் முன்பதிதனுய் இருந்துகொண்டு ஈசனை பஜனம் செய்து கொண்டிருக்கவேண்டும். இதுதான் நம்மதத்தைக் காப்பாற்றுவதென்பதாகும். இதை விட்டுவிட்டு கிரிஸ்தவர்கள் போலும் மகமதியர்கள் போலும் நாமும் ஆள்கூட்டம் சேர்க்க வேண்டுமென்று முயற்சிக்கவே கூடாது. அது மிகவும் அபசாரம். அவ்விதம் செய்வதால் நமக்கும்

மகம்மதியர்களுக்கும் இப்போதேற்பட்டிருக்கும் கலகம் வலுக்குமேயொழியத் தாழ வழியில்லை. இவ்விதமறியாது அவர்கள் போல் நாமும் மதத்திற்கு ஆள்சேர்க்கிறோமென்று ஆரம்பித்து ஆர்யஸமாஜிகள் செய்யும்கார்யத்தால் ஹிந்துமதம் நம்மை விட்டு அகலுகிறது. இவ்வார்யஸமாஜம் எவ்வளவுக்கெவ்வளவு வளர்ந்தோங்குமோ அவ்வளவுக்கவ்வளவு நம்மிந்துமதம் இத்தேசத்தில் சீர்கெட்டுப்போய் இன்னமதமென்று ஸ்வரூபம் தெரியாமலே போய்விடுமென்பது திண்ணமே.

லாலாஜி அவர்கள் இவ்வார்யஸமாஜத்திலிருந்து இந்துமதத்தைத் தெரிந்துகொண்டிருக்கிறாரென்பது விளங்குகிறது. ஏனெனில் ஹிந்துமதம் இருப்பதற்காக முன்னர் நம்மதத்தினின்று மகம்மதியரானவர்களை மறுபடியும் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்றும் தீண்டாமையை விலக்க வேண்டுமென்றும் கூறுகின்றனர். இது ஆர்யஸமாஜ மதத்தினரின் கொள்கை. ஹிந்துமதத்திற்கு இது அடுக்கானதல்ல. இதரமதத்தினரை நாம் பேதம் செய்து நம்மதத்திற்கு அழைக்கக் கூடாதென்பதே நமது கொள்கை.

यो यो यां यां तनुं भक्तः श्रद्धयार्चितुमिच्छति ।
तस्य तस्याचलां श्रद्धां तामेव विदधाम्यहम् ॥
स तया श्रद्धया युक्तस्तस्याराधनमीहते ।
लभते च ततः कामान मयैव विहितान् हितान् ॥

யோ யோ யாம் யாம் தநும் பக்த: ச்ரத்தயார்சிதுமிச்சதி ।
தஸ்ய தஸ்யாசலாம் ச்ரத்தாம் தாமேவ விததாம்யஹம் ॥
ஸ தயா ச்ரத்தயா யுக்தஸ்தஸ்யாராதநமீஹதே ।
லபதே ச தத: காமாந் மயைவ விஹிதாந் ஹிதாந் ॥

எவன் எவன் எந்த எந்த மூர்த்தியை சிரத்தையோடு அர்ச்சிக்க விரும்புகிறானோ அவனவனுக்கு அசையாமல் அதன் பக்தியையே கொடுப்பேன். அவன் அந்த சிரத்தையோடு கூடிக்கொண்டு அதன் ஆராதனத்தையே விரும்புவான். பிறகு என்னால் ஏற்படுத்தப்பட்ட அதன் பலனையே அடைகிறான் என்கிறார். இதனால் न बुद्धिभेदं जनयेत् ந புத்திபேதம் ஜநயேத் என்ற பகவானின் ஆக்ஞையினாலும் புறமதஸ்தனை அம்மதத்திலேயே இருக்கச்

செய்வது தான் நமது கடமை. மற்றும் தீண்டாமை என்பதும் நம்மதத்திற்கு முக்கியமானது. அதையும் விலக்கிவிட முடியாது. லாலாஜி கூறுகிறபடி இவ்விரண்டு கார்யத்தையும் செய்தால் ஹிந்துமதம் ஸ்வரூபமற்று எல்லாமதத்திற்கும் கீழ்ப்பட்டுப் போகுமென்பதை ஆஸ்திகர் யாவருமறிவர். ஹிந்துமதத்தில் லாலாஜி போன்றவர்களுக்கு உண்மையான பற்றிருக்குமாகில் நான் கூறியபடி அவர்கள் பாடுபட்டு ஹிந்து மதபக்தர்களாய் ஆகி மேன்மை பெறவேண்டுமென்பதே எனது கோரிக்கை.

M. N. சுப்பிரமண்ய சாஸ்திரிகள்.

நெரிஞ்சிப்பேட்டையில்
ஆசார்யேந்திர விஜயம்.

(உ௯௯-வது பக்கத்தொடர்ச்சி.)

பிறகு அவ்விடத்திலுள்ள விசேஷங்களையும் கிராமங்களையும் தீர்த்தக் குளத்தையும் பார்த்துவிட்டு கீழேயுள்ள கிராமங்களையும் காவேரீ மஹாநதியையும் அணைகட்டுமிடத்தையும் விஜயஞ் செய்திருக்கிற மடத்தையும் பார்த்து சந்தோஷமடைந்தார்கள். இதற்குள் மணி 10 ஆகிவிட்டது. 7 மைல் தூரமுள்ள பாதை வழியாக இறங்க ஆரம்பித்து மத்தியில் மூங்கில்த் தூறைக்கண்டதும் ஸங்கல்பித்த பிரகாரம் தானாகவே தண்டத்துக்கு உபயோகமான 2 3 வேணுக்களை க்ரஹித்துக் கொண்டார்கள். மத்தியிலுள்ள விசேஷங்களை ஸாமான்யமாகப் பார்த்துக்கொண்டு வேகமாகவே வந்தார்களாயினும் அடிவாரம் வந்துசேர முக்கால் மைல் தூரமிருக்கையில் மணி 12-க்குமேல் ஆய்விட்டது. கதிரவன் தாபம் ஸஹிக்க முடியவில்லை பாறைகளெல்லாம் செந்தணல் போலாய் விட்டது. இனி இப்பொழுது கீழே இறங்குவது ஸாத்யமில்லையென்று தீர்மானித்துக் கொண்டு ஓர் மரத்தடியில் தங்கிவிட்டார்கள்.

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸந்தர்சனத்திற்கும் ஸ்ரீ சந்திரமௌளீசுவர ஸந்தர்சனத்திற்கும் பல ஊர்களிலிருந்து வந்திருந்த ஜனங்களும் உள்ளூர் ஜனங்களும் சகோரபக்ஷிசந்திரிகையை எதிர்

பார்ப்பது போல் ஸ்ரீ ஸ்வாமிகளின் வரவை எதிர்பார்த்திருந்தார்கள். மணி 1 ஆய்விட்டது. இச்சந்தர்ப்பத்தில் ஸ்வாமிகளுடன் கூடப் போனவர்களிலொருவர் கீழேவந்து ஸ்ரீ ஸ்வாமிகள் முக்கால் மைல் தூரத்தில் மாத்தடியில் தங்கியிருப்பதாயும், மற்ற ஜனங்களும் களைப்படைந்திருக்கிறார்களென்றும் தீர்த்தமும் ஆகாரமும் அனுப்பவேண்டுமென்றும் சொன்னார். ஜனங்களுக்கு விசேஷமான பரபரப்பு ஏற்பட்டுவிட்டது. தீர்த்தமும் ஆகாரமும் அனுப்பி இதர ஜனங்களுடைய களைப்புத் தீர்க்கப்பட்டதே தவிர ஸ்வாமிகள் எதையும் அபேக்ஷிக்கவில்லை. சிலர் எலிமிச்சம்பழம், கற்கண்டு, தீர்த்தம் இவைகளையும், சிலர் க்ஷீரத்தையும், சிலர் இளநீரையும், சிலர் தயிரையும் சிலர் அவல் முதலிய ஆகாரங்களையும்கொண்டு போனார்கள். அன்று ஏகாதசியானதினாலேயும் சந்திரமௌளீசுவராராதனம் செய்யப்படாமலிருப்பதினாலேயும் எந்த விதமான சௌகரியமுஞ் செய்துகொள்ள முடியாதென்றும் தமக்கு சிரமமென்பதே இல்லையென்றும் வெய்யல் தாழ்ந்ததும் இறங்கலாமென்றும் ஒருவரும் கவலைப்பட வேண்டாமென்றும்சாந்தமான முகத்துடன் இனிமையான வாக்யங்களைச் சொல்லியனுக்ரஹித்துவிட்டு நிழலில் சயனித்துக்கொண்டார்கள். இருந்தாலும் அவரிடமுள்ள பக்தி விசேஷத்தால் ஜனங்களின் கவலை நீங்கவில்லை. பிறகு மணி 4 ஆச்சுது. ஆகாசம் மேகாவிருதமாக இருந்தது. குளிர்ந்த காத்துவீச ஆரம்பித்தது பாதைகள் குளிர்ச்சியடைந்தன. ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு உத்ஸாஹம் அதிகரித்துவிட்டது. முகம் பூர்ண சந்திரனைப்போல் ப்ரகாசிக்க ஆரம்பித்தது. சந்திரிகைக் கொப்பான மந்தஹாஸமும் பிரகாசித்தது. அப்பொழுது அங்கிருந்த ஜனங்களைப் பார்த்து இன்னமொரு முறை வேண்டுமானாலும் மலையேறி இறங்கலாம். அவ்வளவு உத்ஸாஹமும் தைரியமும் இருக்கிறது. வெய்யலின் தாபத்துக்காகக் கொஞ்சம் தங்கவேண்டியிருந்தது. இனி பாதகமில்லை இறங்கலாமென்று சொல்லி இறங்கி அடிவாரம் வந்து சேர்ந்து மலையில் தனக்கு உதவி செய்த ஜனங்களுக்கும் அடிவாரத்தில் வந்திருந்த ஜனங்களுக்கும்திருப்திகரமானவார்த்தைகளைச் சொல்லி சிபிகையில் ஆரோஹணித்து 5 மணிக்கு ஸ்ரீ மடத்துக்கு விஜயமானார்கள். பர்வதாரோஹணமானது ஜனங்களுக்குச் சிரமமாகத் தோன்றியதே தவிர ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு உத்ஸாஹமாக

வேதான் இருந்தது. அவ்விதமுள்ள விசேஷங்களை எல்லாம் ஜனங்களிடம் சொல்லி ஆனந்தப்பட்டார்கள். பிறகு பூஜாதிகார்யங்கள் கிரமமாக நடந்தன.

மருநாள் 13—4—27 மத்யான்னம் 4மணிக்குமேல் ஸ்ரீஸ்வாமிகளால் ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாளுடைய சரித்ரம் உபன்யஸிக்கப்பட்டது. அனேக இடங்களில் ஆசார்ய சரிதோபன்யாஸம் நடந்திருக்கலாம். கேட்டுமிருக்கலாம். நாமே படித்துமிருக்கலாம். இதுபோன்ற உபன்யாஸத்தைக் கேட்டிருக்க முடியாது. இவ்வளவு வ்யக்தமாக விஷயத்தைத் தெரிந்துகொண்டிருக்கவும் முடியாது. இனிமையான குரலுடன் ஸகல ஜனங்களும் தெரிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் பீடிகையுடன் சங்கர சரித்திரத்தை ஆரம்பித்து சுருக்கமாகச் சொல்லிக்கொண்டு, இச்சரித்ரத்தைச் சொல்லக்கூடிய கிரந்தங்கள் அனேகம். அதாவது மாதவீய சங்கரவிஜயம், கோஶீய சங்கரவிஜயம், சங்கரவிஜய விலாஸம், சங்கராப்யுதயம், ஆனந்தகிரீயசங்கரவிஜயம், குரு ரெத்னமாலிகை, வியாஸாசலீய சங்கரவிஜயம், பதஞ்ஜலிசரிதம், ப்ரம்மாண்ட புராணாந்தர்கதமான மார்க்கண்டேயஸம்ஹிதை, சிவரஹஸ்யம் முதலியன. இக்கிரந்தங்களில் இச்சரித்திரத்தை ஆரம்பித்திருக்கும் பிரகாரத்தையும் முடித்திருக்கிற பிரகாரத்தையும் மத்தியில் உள்ள விஷயங்களையும் சுருக்கமாகச் சொல்லி ஒவ்வொரு கிரந்தங்களுக்குமுள்ள விரோதத்தையும் அத்ற்குப் புராண வசனங்களையும் அனுகுணமான யுக்தியையுங்கொண்டு எல்லா க்ரந்தங்களுக்கும் ஐகமத்யத்தை விளக்கிக் காட்டித் தகுந்த ஸமாதானத்தையும் சொல்லி யோகலிங்கம், போகலிங்கம், முக்திலிங்கம், வரலிங்கம், மோக்ஷலிங்கம், என்ற ஐந்து லிங்கங்களில் யோகலிங்கத்தை மூலாம்னாய பீடமாகிய ஸ்ரீகாஞ்சியில் ஸ்தாபனம் செய்தார்களென்றும் இதை அர்ச்சிப்பவர் ப்ரும்மசர்யத்திலிருந்தே ஸன்யாஸம் பெற்றவர்களாயிருக்க வேண்டுமென்றும் இதை உத்தேசித்துத்தான் ஆதி ஆசார்யாள் இந்த பீடத்தில் க்ரஹஸ்தாச்ரமத்திலிருந்து ஸன்யாஸம் பெற்ற ஸுரேசுவரர் இருக்கும்போதே ப்ராம்மசர்யத்திலிருந்தே ஸன்யாஸம் கொடுக்கப்பட்ட ஸர்வக்ஞர் என்பவரை ஸ்தாபனம் செய்தாரென்றும், கடைசியாகத் தனது 32-வது வயது முடிவில் இக்காஞ்சியில்தான் தனது ஸ்வரூபத்துடன் கலந்தாரென்றும் நிர்விவாதமாக உபன்யஸித்தார்கள்.

(தொடரும்) N. K. வேங்கடரமண சாஸ்திரிகள்.

337

உ

ஸ்ரீசந்த்ரமௌளீச்வராய நம:

ஸ்ரீமடம் தர்ம ஸதஸ்.

கர்மாநுஷ்டானங்களை அந்தந்த சூத்திரத்தில் சொல்லியபடி சரியான ஆசாரியர்களைக்கொண்டு நன்கு நடைபெறவேண்டி ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகள் அவர்களின் ஆக்ஞாநுஸாரமாய் நாளது பிரபவஷு ஆனிமீ 20உ (4—7—27) ஸோமவார உபக்கிரமம் செய்து ஒரு வாரம் கும்பகோணம் ஸ்ரீமடத்தில் தர்மஸதஸ் நடைபெறும். ஷெ ஸதஸ்ஸில் கீழ்வரும் விஷயங்களில் பரீக்ஷைகள் நடத்தப் படும்.

பரீக்ஷைகள் கிருஹ்ய பரீக்ஷை என்றும், தர்மபரீக்ஷை என்றும் இருவகையாகும்.

1. இவ்விரண்டில் आश्वलायनं, आपस्तम्बं, बोधायनं, सत्याषाढं, भारद्वाजं, आग्निवेश्यं, कात्यायनं, जैमिनि, द्राह्यायण ஆச்வலாயநம், ஆபஸ்தம்பம், போதாயநம், ஸத்யாஷாடம், பாரத்வாஜம், ஆக்நிவேச்யம், காத்யாயநம், ஜைமிநி, த்ராஹ்யாயணத்தைச் சேர்ந்த खादिरं காதிரம் இவைகளில் ஏதாவது ஒரு सूत्र ஸூத்ரத்தில் பாராமல் சொல்லும் திறமையும் प्रयोगज्ञान ப்ரயோகஜ்ஞாநமும் अर्थज्ञान அர்த்தஜ்ஞாநமும் உள்ளவர்கள் गृह्य க்ருஹ்யபரீக்ஷைக்கு अर्ह அர்ஹர்களாவார்கள். वैद्यनाथदीक्षितीयं आशौचकाण्डं வைத்யநாததீக்ஷிதீயம் ஆசௌசகாண்டம் நன்றாய் अर्थज्ञान அர்த்தஜ்ஞாநத்துடன் தெரிந்திருக்கவேண்டும். மேற்கூறிய गृह्यसूत्र वैद्यनाथ दीक्षितीयाशौचकाण्डं வைத்யநாததீக்ஷிதீயாசௌசகாண்டம் இவைகளில் பரீக்ஷைசெய்யப்பட்டுத் தேறினவர்களுக்கு "गृह्यज्ञः" க்ருஹ்யஜ்ஞ:" என்ற பட்டமும் அதற்கு அடையாளமும் ஸம்பாவனையும் ஸன்மானமும் செய்யப்படும்.

2. ऋक् यजुस् सामवेद ரிக் யஜுஸ் ஸாமவேதங்களில் ஏதாவது ஒரு வேதத்தில் அதாவது (ऋक् ரிக் அல்லது யஜுஸ்

ஸாயிருந்தால் क्रमान्त க்ரமாந்தமும் साम ஸாமவேதமாயிருந்தால் प्रकृति ऊह रहस्य पर्यन्त ப்ரக்ருதி ஊஹ ரஹஸ்ய பர்யந்தமும்) अध्ययनं அத்யயநம் செய்து மேற்கூறிய गृह्य க்ருஹ்ய ஸூத்ரங்களில் ஏதாவது ஒரு ஸூத்திரத்தில் பாராமல்சொல்லும் திறமையும் प्रयोगज्ञान ப்ரயோகஜ்ஞாநமும் अर्थज्ञान அர்த்தஜ்ஞாநமும் वैद्यनाथ दीक्षितीय வைத்யநாததீக்ஷிதீயத்தில் எல்லா காண்டங்களிலும் நல்லக்ஞானமும் உள்ளவர் தர்ம பரீக்ஷைக்கு அர்ஹர்களாவர்கள்.

இவைகளில் பரீக்ஷை கொடுத்துத் தேறியவர்களுக்கு "धर्मज्ञः தர்மஜ்ஞ:" என்ற பட்டமும் ஸுவர்ணத்தினால் அதற்கு ஒரு அடையாளமும் சால்வையும் ஸம்பாவனையும் ஸன்மானம் செய்யப்படும்.

இந்த பரீக்ஷைக்கு வருகிறவர்கள் வருகிற ஆனி-மீ 10வ க்குள் தாங்கள் இன்ன பரீக்ஷைக்கு வருகிரோம் என்பதை விவரமாய் ஸ்ரீமடம் ஸர்வாதிகாரிக்கு பத்திரிகையால்தெரிவிக்க வேண்டும்.

இக்காலத்தில் धर्मशास्त्रज्ञानं தர்மசாஸ்த்ரஜ்ஞாநம் மிகவும் லோபித்து ஷை धर्मज्ञान தர்மஜ்ஞாநமுள்ளவர்களுக்கும் அதில்லாதவர்களுக்கும் அற்பமேனும் பேதமில்லாமல் वैदिक வைதிக கர்மாக்கள் திருப்தியாய் நடைபெருததினால் இந்த யோக்யதையுள்ளவர்கள் ஸ்ரீ மஹாஸந்நிதானத்தில் தங்கள் யோக்யதையை प्रदर्शन ப்ரதர்சநம் பண்ணி பெற்றஸன்மானத்தை மஹாஜனங்கள் அறிந்து தங்களுடைய கர்மாநுஷ்டானங்களை ஸபலமாய்ச் செய்து கொள்ளும்படிக்காக யோக்கியாள் இந்த ஸத்ஸ்ஸுக்கு அவசியம் வரவேண்டும்.

ஷை ஸதஸ்ஸில் பரீக்ஷாதிகாரிகள்:—

திருவையார் ப்ரஹ்மஸ்ரீ சாஸ்திரரத்னாகர பா. விசுவநாத சாஸ்திரிகள் அவர்களும்,

வாகூர் ப்ரஹ்மஸ்ரீ ஸ்மிருதிபூஷணம் பாஷ்யபாவக்ஞ ஸ்வா. வெங்கடராம சாஸ்திரிகள் அவர்களும்.

கும்பகோணம்,
24—5—27.

ஸ்ரீமடம் ஸர்வாதிகாரி,
ஸ்ரீ காரியம், K. குப்புஸாமி அய்யர்.

சென்னையில் ஸ்ரீ மதாசார்ய ஜயந்தி.

ஸ்ரீகாஞ்சிகாமகோடிபீட மடத்திற்கு சென்னை வாசி ஒருவரால் தர்மத்திற்கு கட்டிக்கொடுக்கப்பட்ட மடம் ஒன்று தம்பு செட்டி வீதியிலிருக்கிறது. இருநூறு வருஷகாலமாக அதில் ஓர் சிறு அழகிய ஆசார்ய பிம்பம் அர்ச்சிக்கப்பட்டுவருகிறது. இம்மடத்தைச் சேர்ந்த சில ஸொத்துக்கள் அருகிலுள்ள கிராமங்களிலிருக்கின்றன. அதை கவனிக்க இந்த ஓர்மானேஜருமிருக்கிறார். இதற்கு ஏஜண்டாக உள்ளவர்கள் கணேஷ் கம்பெனி ஸொந்தக்காரரான பிரும்மஸ்ரீராமசேஷ அய்யாவர்கள். குருபக்த சிகாமணியான இவரது முயற்சியால் மற்றுமோர் பெரிய ஆசார்ய விக்ரஹம்வார்க்கப்பட்டு பிரதிதினம் இரண்டுவேளை பூஜையும் குருவார சுக்ரவார பௌர்ணமிகளில் விசேஷ பூஜையும் நடந்து வருகிறது.

இவ்வருஷம் ஆசார்ய ஜயந்தியை முன்னிட்டு மூன்று மாதம் முன்னதாகவே பல துண்டு பிரசுரங்களும் பஜனைகளும் காலக்ஷேபங்களும் உபன்யாஸங்களும் நடத்தப்பட்டன. பற்பல பண்டிதமணிகள் ஸகாயம் செய்தனர். ஸ்ரீமதாசார்ய சரிதம் ஆங்கிலம், தமிழ், தெலுங்கு பாஷைகளில் அழகாக அச்சிட்டு இலவசமாக எல்லோருக்கும் வழங்கப்பட்டன. குருபாதாளுடைய ஸ்துதிகளும் வழங்கப்பட்டன. ஆதிகுரு தற்கால குரு இவர்கள் திருவுருவப்படங்கள் பலவர்ணங்களுடன் எழுதப்பட்டு ஆசார்யஜயந்தியை கொண்டாடின விடங்களுக்கு அனுப்பப்பட்டன. இம்மடத்திலும் எங்கும் ஆசார்ய படமே காணப்பட்டது. இம்மடத்தின் ஏஜண்டின் உத்ஸாகமான தூண்டுதலால் மயிலாப்பூர் திருவல்லிக்கேணி மாம்பலம் முதலிய இடங்களில் அதிவிமரிசையாக ஜயந்தி உத்ஸவம் கொண்டாடப்பட்டது. எல்லாவிடத்திற்கும் ஏஜண்டு சென்று உத்ஸாகத்தையும் பக்தியையும்வளர்த்து வந்தார் ஆங்காங்கும் வேதோக்த பூஜையும் பாஷ்யாதி பாராயணமும் உபன்யாஸங்களும் நடைபெற்றன. தம்புசெட்டி வீதியிலுள்ளது தாய்மடமென்றும் மற்றவை குழவிகளெனவும் கூறத்தகும்.

தாய்மடத்தில் சுவருகளெல்லாம் பெரும்பெரும் கொட்டை எழுத்துக்களில் பொய்யான வாழ்வை சாச்வதமாக வெண்ணி ஏமாறாமல் ஸ்ரீமதாசார்யர்காட்டியவழியைக்கைக்கொள்ளும் படி

ஞான்டும் பல நீதிவாக்யங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. மடத்திற்குள் எங்குதிரும்பினாலும் ஆசார்யபடமோ நீதிமொழியோ தான் கண்ணில் படும். காலைமாலைகளில் காதைப்பிளக்கும்வேத கோஷம் கைலாஸத்திற்கும் எட்டும்படியிருந்தது. திருவல்லிக் கேணியிலுள்ள அரசாங்க உத்யோகம் செய்யும் லௌகிகர்கள் வலுவிலேவந்து ப்ரதிதினம் ருத்ரசமகாதி பாராயணம் செய்து வந்தனர். பிரும்மஸ்ரீ வே. ஸோமதேவசர்மாவின் தலைமையின் கீழ் பல பண்டிதர்கள் ப்ரஸ்தாநத்ரயபாராயணம் செய்தனர். மைலை வக்கீல் ஸ்ரீமான் டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யரைத் தலையாகக் கொண்ட திருப்புகழ் பஜனை மாலைவேளையில் நடந்தது. ஸ்ரீமான் ஸங்கீத சாலைத் தலைவர் சுந்தரேசய்யர் மாணவிகளைக் கொண்டு ஸ்துதி நடத்தியது மிகச்ராவ்யமாயிருந்தது. கொடவாசல் ஸ்ரீமான் நரஸிம்மாசாரி ஸ்வாமிகள் ஆசாரிய சரிதத்தை இரவுகளில் காலக்ஷேபமாக நடத்திவந்தார். ப்ரம்மோத்ஸவம்போல் பத்துநாளும் அதிகவிமர்சையுடன்ஜயந்தி நடந்தது. ஒவ்வொரு நிமிஷமும் ஸபலமாகவேயிருந்தது. பூஜைக்குப் பிறகு எல்லோருக்கும் பலவகை சித்ரான்ன ப்ரஸாதமளிக்கப்பட்டது. இன்னும் 10 நாள் உத்ஸவம்நடவாதா என்றுசொல்லாதாரில்லை. பண்டிதர்முதல் பாமரர் வரை எல்லோருள்ளத்தையும் கொள்ளைகொள்ளும்படி ஸகலஸம்விதாநங்களுமிருந்தன.

ஊர்வலச்சிறப்பு.

ஸ்ரீ மதாசாரிய அவதார தினத்தன்று விசேஷ பூஜையும் எண்ணிறந்த பிராமணர்களுக்கு ஸந்தர்ப்பணையும் நடந்தது. இரவில் அற்புதமான விமானத்தில் ஆசார்ய விக்ரஹம் அலங்கரிக்கப்பட்டது பல கொடைகள் சாமரங்கள் விருதுகள் கொடிகள் பாண்டு மேளம் முன்னே சென்றது. வேதபாராயணமும் இருபதுக்கு அதிகமான பஜனைகோஷ்டிகளும் பின்னேசெல்ல ஆசாரியர் பிராமணர்களது தோளின்மீது தெருவையடைத்து பவனி வந்த அழகும், பக்தர்களுக்கு புஷ்ப சந்தன தாம்பூல மளித்ததும் வர்ணனையிலடங்காது. அன்றன்றும் அபரிமிதமாகக் கூட்டம் வந்து தர்சித்துச் சென்றது. பண்டிதச்ரேஷ்டர்களும் பக்தவக்கீல்களும் ஏனையோரும் வந்து குமிழ்ந்தனர். ஸ்ரீமான் ராமசேஷய்யரவர்கள் நிமிஷங்கூட ஓரிடத்தில் நிற்காது அலைந்து ஆதிசங்கர பகவத்பாதாள் நேராகவந்திருப்பதாகவே நினைத்து வேலை

செய்ததோடு மற்றவர்களையும் அங்ஙனமே நினைக்கும்படி செய்து விட்டார். நேரில் இதைக் கண்டோர் இது பூலோககைலாச மென்றே நினைப்பர். ஏழைகளுக்கு தினப்படி பானகமும் நீர்மோருமளிக்கப்பட்டது பலரும் வாயார வாழ்த்திச்சென்றனர். இதே போல் ஒவ்வொராண்டும் நடத்தும்படி உத்ஸாஹத்தையும் தேஹ வலிவையும் நீண்ட ஆயுளையும் ஏஜண்டுக்கும் மானேஜருக்கும் ஏனையோருக்குமளிக்கும்படி ஸ்ரீ சங்கரரைப்ப்ராத்திக்கிறேன்.

ஸ்ரீவத்ஸ. வெ. ஸோமதேவசர்மா.

உலகத்தில் ஸதாசாரத்தைக் காப்பது ஆஸ்திகர்களின் கடமையாதலின் அதற்கு ஓர் மார்க்கம் ஏற்படுவது அவசியம் என்பதை உத்தேசித்து ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரிய மஹாஸ்வாமிகள் அவர்கள் கீழ்வரும் ஏற்பாட்டை ஆக்ஞாபித்திருக்கிறார்கள். ஸ்ரீமடம் சிஷ்யமஹாஜனங்கள் ஆசாரியாளின் ஆக்ஞையை நிறைவேற்றி வைக்க ஏற்பாடுகள் செய்து ஸ்ரீ சந்திரமௌளீசுவர கிருபையாலும் ஸ்ரீமத்ஆசாரியாளின் பூர்ணானுக்கிரஹத்தாலும் ஐஹிகாமுஷ்மிக ஶ்ரேயஸ்ஸுகளை அடையவேண்டுமாய்க் கோரப்படுகிறது.

1. எந்த கிராமத்திய மஹாஜனங்கள் ஸ்ரீமடத்திலிருந்து அனுப்பப்படும் பண்டிதரைக்கொண்டு ஸத்விஷயங்களைத்தெரிந்து கொண்டுகூடியவரையில் கர்மானுஷ்டான ஸதாசாரங்களை நடத்திவர விரும்புகிறார்களோ அப்படிப்பட்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் நான்குமாதம் இருந்து ஸத்கர்மானுஷ்டான ஸதாசாரங்களை உபதேசிக்க பண்டிதர் ஒருவர் அனுப்பப்படுவார்.

2. மேற்கண்டபடி அனுப்பப்படும் பண்டிதரால் நித்திய கர்மானுஷ்டானங்களுக்கு உபயோகமான மந்திரங்களுடைய அத்தியாபனமும் உபந்நியாஸங்களும்ஏதாவது ஒரு கிரந்த காலக்ஷேபமும் நடத்தப்படும்.

3. ஷை பண்டிதருக்கு காலக்ஷேபத்திற்காக ஏற்படும் திரவ்யச் சிலவை ஸ்ரீமடத்தில் பாதி அம்சமும் அந்த கிராமத்தார் பாதி அம்சமுமாக அங்கீகரித்து நடத்த வேண்டியது.

4. இம்மாதிரியான அபேக்ஷையுள்ள கிராமத்தார்கள் 50 பேருக்குக் குறையாமல் கையெழுத்திட்டு ஸ்ரீமஹாஸந்நிதானத்திற்கு விக்ஞாபனம் செய்து கொள்ளவேண்டும்.

ஸ்ரீமடம
கும்பகோணம்.
24—5—27

ஸ்ரீமடம் ஸர்வாதிகாரி
ஸ்ரீகாரியம்
K. குப்புஸ்வாமி அய்யர்.

கும்பாபிஷேக முகூர்த்தத்தைப் பற்றிய
ஓர் விக்ஞாபனம்.

அன்பர்களே!

ஆரியதர்மத்தின் வாயிலாகவும் தேச ஊழியன் வாயிலாகவும் கும்பாபிஷேக முகூர்த்தத்தைப் பற்றிய ஐயவினாவையும் அதற்கு ப்ரஹ்மஸ்ரீ பாலசுப்பிரமண்யஅய்யரவர்களும் சுந்திர சாஸ்திரிகளவர்களும் ஆரியதர்மத்தின் வாயிலாக அளித்த விடையையும் வாசகநேயர்கள மறந்திருக்கமாட்டீர்கள் என நம்புகிறேன். இது இப்படி இருகக,

அக்ஷய-வருஷ தை-மீ 25உ சோமவாரத்தன்று விருஷபலக்னத்தில் புதுக்கோட்டை சமஸ்தானத்தை ஒட்டிய இராமச்சந்திரபுரமென்கிற ஊரில் வடவண்டைக்கோடியில் விளங்கிவரும் தெண்டாயுதபாணிஸ்வாமிக்கு ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேகம் நடந்தேறியதாக நமது ஆரியதர்மத்தில் வெளிவந்ததையும் கவனித்திருப்பீர்கள். ஆகையால் கும்பாபிஷேகமுகூர்த்தவிஷயத்தில் கண்டாந்ததோஷம் லக்கினத்தில் பாபயோக பாபதிருஷ்டி பஞ்சகம் முதலியன கவனிக்கவேண்டியது அவசியமில்லைபோலும்.

ஆனால் நண்பர் பாலசுப்பிரமண்ய அய்யாவர்களென சுந்திர சாஸ்திரிகளென இவர்கள் ஷை தோஷங்களுக்கு இடம்தருது மறுத்துவிட்டார். இனிமேலாவது ஏகவிம்சதி (21) மஹாதோஷங்கள் இருப்பினும லக்னத்தில் பாபயோக பாபதிர்ஷ்டி இருப்பினும் கும்பாபிஷேகாதி சுபமுகூர்த்தங்கள் செய்யலாமெனனும் முறைஇருப்பின் விதிபுரஸ்ஸரம தெரிவிக்கும்படி வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,

K. S. சுந்திரஜோதிஷர். கொத்தமங்கலம்.